# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டம்

---

*(1994, ஜூன் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

*1994, ஜூன் மாதம் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

*விலை : ரூபா 2.70* *தபாற் செலவு : ரூபா 2.55*

## 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில் நுட்பவியல் அபிவிருத்திச் சட்டம்

[1994, ஜூன் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ 53/93

**இலங்கையில் விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்வதற்கும்; முறையே தேசிய விஞ்ஞான, தொழில் நுட்பவியல் ஆணைக்குழு, தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கைத் தகவல் தொழில்நுட்பவியல் பேரவை, கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம் அத்துடன் நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆதர் சீ. கிளாக்கு நிறுவகம் என்பவற்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில் நுட்பவியல் அபிவிருத்திச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும் (இது இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்). சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:— சட்டத்தின் குறிக்கோள்.

(அ) துரித பொருளாதார அபிவிருத்தியையும் மேம்பாடுடைய வாழ்க்கைத் தரத்தினையும் எய்துவதற்கும் வறுமையைத் தணிப்பதற்குமான முயற்சியின் ஒரு முழுமைவாய்ந்த பகுதியாக விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் பயன்பாட்டை ஊக்குவித்தலும், கொள்கையை வகுத்தமைத்தலிலும் முடிவெடுத்தலிலும் விஞ்ஞானிகளையும் தொழில்நுட்பவியலாளர்களையும் ஈடுபடுத்தலும்;

(ஆ) விஞ்ஞான, தொழில்நுட்பவியல் ஆற்றலில் சுய போதும் தன்மையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் விஞ்ஞான, தொழில்நுட்பச் செயற்பாட்டை பேணிவளர்த்தலும் மொத்தத் தேசிய உற்பத்தியின் நியாயமான ஒரு விகிதமானது விஞ்ஞான, தொழில்நுட்பவியற் செயற்பாடுகளுக்கெனப் பிரித்தொதுக்கப்படுதலை உறுதிப்படுத்தலும்;

(இ) கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் சேவைகளின் துரித வளர்ச்சிக்குத் தொழில்நுட்பவியலின் இறக்குமதியையும், மாற்றமைப்பையும் அத்துடன் நன்னிலைப்படுத்தலையும் ஊக்குவிக்கும் அதேவேளையில் சாத்தியப்படக் கூடியவிடத்தெல்லாம் சுதேசத் தொழில்நுட்பவியலின் அபிவிருத்திக்கு ஆதாவளித்தல்;

(ஈ) உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களும் ஆராய்ச்சி நிறுவனங்களும் உயர்ந்த சிறப்பியல்பும் தகுதியும் வாய்ந்த விஞ்ஞானிகளையும் தொழில்நுட்பவியலாளர்களையும் தொழில்நுட்ப வல்லுநர்களையும் உருவாக்குதலை உறுதிப்படுத்துதலும் அவர்களை இலங்கையிலேயே தங்க வைப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்கு ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொடுத்தலும்;

2— ட 030391—1220 (94/02)

(உ) விஞ்ஞானத்திலும் அதன் செயல்முறைப் பிரயோகங்களிலும் அடிப்படைக் கல்வியொன்றைப் பெறுவதற்கு எல்லா ஆட்களுக்கும் போதியளவு வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்;

(ஊ) விஞ்ஞானத்தினதும், விஞ்ஞான முறைமையினதும் தொழில்நுட்பவியலினதும் அத்துடன் நவீன சமுதாயத்தில் விஞ்ஞானம் ஆற்றுகின்ற முழுமைவாய்ந்த பங்களிப்பினதும் பெறுமதியை விளங்கிக்கொள்வதை மக்களிடையே உருவாக்குதல்;

(எ) விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பச் செயற்பாட்டினதும நன்மைகளை மக்களின் எல்லா வர்க்கத்தினருக்கும் பரவச் செய்தல்;

(ஏ) இலங்கையிலுள்ள விஞ்ஞானிகளிடையேயும் அத்துடன் இலங்கையிலுள்ள விஞ்ஞானிகள், இலங்கைக்கு வெளியேயுள்ள விஞ்ஞானிகள் ஆகியோரிடையேயும் விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஊக்குவித்தலும் பலப்படுத்தலும் அத்துடன் உலகளாவிய விஞ்ஞான, தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவுக்கும் செயற்பாட்டுக்கும் அணுக்கத்தை ஏற்படுத்தலும்;

(ஐ) இலங்கையில் விஞ்ஞானத்திற்கும் தொழில்நுட்பவியலுக்குமான செயல்முறை நுணுக்கங்களையும் சட்டவாக்கத்தையும் நிறுவகக் கட்டுக்கோப்பையும் தொடர்ச்சியாகத் திட்டமிடுவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் அத்துடன் மீளாய்வதற்குமான ஆற்றலை அபிவிருத்தி செய்தல்;

(ஒ) இலங்கைக்குப் பயனளிக்கும் சாத்தியமுள்ள விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் முந்துரிமைத் துறைகளை இனங்காணுதலும் அத்தகைய துறைகளில் ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவித்தலும்.

அமைச்சர் 2 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோள்களைக் கருத்திற் கொள்ளுதல்.

3. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பான கொள்கைகளை வகுத்தலிலும் அத்துடன் அத்தகைய கொள்கைகளை அமுலாக்குதலிலும் அமைச்சரானவர் 2 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோள்களைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், தேசிய விஞ்ஞான, தொழில்நுட்பவியல் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்தலும் வேண்டும்.

## பாகம் I

### தேசிய விஞ்ஞான, தொழில்நுட்பவியல் ஆணைக்குழு (தே. வி. தொ. ஆ.)

தேசிய விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆணைக்குழுவைத் தாபித்தல்.

4. தேசிய விஞ்ஞான, தொழில்நுட்பவியல் ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டியதான ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பிடு செய்யப்படும்).

5. ஆணைக்குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:— ஆணைக்குழுவின் பணிகள்.

(அ) (i) பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கு விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் பிரயோகங்கள்;

(ii) கைத்தொழில், கமத்தொழில், சேவைகள் அத்துடன் பொருளாதாரம் என்பவற்றின் வினைத்திறன் மற்றும் போட்டிநிலை மீது விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் தாக்கம்;

(iii) மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் சுகாதாரம், ஊட்டச்சத்து, வறுமை ஒழிப்பு என்பன மீது விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் தாக்கம்;

(iv) கல்விக்கும், பயிற்சிக்கும், ஆராய்ச்சிக்கும் பொறுப்பான அதிகாரிகளுடனான கலந்தாலோசனையுடன் விஞ்ஞானத்துக்கும் தொழில்நுட்பவியலுக்கும் தேவையான மனித வளங்களினதும் வேறு வளங்களினதும் அபிவிருத்தி;

(v) இலங்கையின் இயற்கை வளங்களின் அபிவிருத்தி மற்றும் முகாமை;

(vi) தேசிய முக்கியத்துவமுடையதும் சாத்தியமுள்ள விஞ்ஞான, தொழிநுட்பவியற் துறைகளை இனங்காணலும் அத்துடன் முன்னுரிமையளித்தலும்;

(vii) விஞ்ஞான, தொழிநுட்பவியல் நிபுணத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தடுத்துவைப்பதற்கும் கவருவதற்கும் உசிதமான சூழ்நிலையொன்றை உருவாக்குதல்;

(viii) விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் உற்பத்தி சார்ந்த பிரயோகத்திற்கு உசிதமான முகாமைத்துவ செயல்நுணுக்கங்களைத் தாபித்தல்;

(ix) விஞ்ஞான, தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் அபிவிருத்தி, ஆராய்ச்சி நிதியளிப்புகளின் முன்னுரிமை உட்பட விஞ்ஞானத்துக்கும் தொழில்நுட்பவியலுக்குமான நிதிகளை ஒதுக்கீடு செய்தல்.

தொடர்பான கொள்கைகளும் திட்டங்களும் உள்ளடங்கலாக அரசாங்கத்திற்கு, விஞ்ஞானம் அத்துடன் தொழில்நுட்பவியல் அபிவிருத்திக்கான கொள்கைகள், திட்டங்கள்மீது மதியுரை செய்தல்;

(ஆ) இரண்டாம் பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோள்கள் தொடர்பாக, மனித வளங்களின் அபிவிருத்திக்கான வழிமுறைகளின் பயனுறுதி, விஞ்ஞான, தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் செயற்திறன், விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் பேரிலான பகிரங்கச் செலவீடுகளின் பயனுறுதி அத்துடன் பகிரங்கத் துறை, தனியார் துறைப் பொறுப்பு முயற்சிகளால் விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பவியலினதும் பயன்பாடு என்பன பற்றி முந்திய ஆண்டிற்கான இலங்கையின் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் அறிக்கையொன்றை

ஆண்டுதோறும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தல்;

(இ) இரண்டாம் பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோள்கள் தொடர்பில் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் தேர்ச்சியை மீளாய்வு செய்தல்;

(ஈ) விஞ்ஞான, தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு இயைபான கொள்கைகள் மற்றும் திட்டங்கள்மீது அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குவதற்கு முன்னர் இயைபான விஞ்ஞான, தொழில்நுட்பவியல் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்தல்;

(உ) அமைச்சரின் முன் அங்கீகாரத்துடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மீதான இலங்கை மாநாட்டை ஈராண்டுகளுக்கு ஒருமுறை கூட்டுதலும், அத்துடன் 2 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோள்கள் தொடர்பில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மீதான கலந்துரையாடலுக்கான ஆய்வரங்கு ஒன்றினை ஒழுங்கு செய்தலும்.

**ஆணைக்குழுவின் அமைப்பு.**

6. (1) ஆணைக்குழுவானது, விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், கமத்தொழில், வர்த்தகம், கைத்தொழில் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் ஆட்களிடையேயிருந்து, அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சனாதிபதியால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆளொருவர், பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது அமைச்சொன்றின் செயலாளராக அல்லது விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட ஒரு திணைக்களத்தின் அல்லது நிறுவனத்தின் தலைமையதிகாரியாக இருப்பின் அவர், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் சனாதிபதிக்கு முகவரியிட்டு அனுப்பப்படும் கடிதத்தின் மூலம் தமது பதவியைவிட்டு விலகலாம் என்பதுடன், அது சனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து அத்தகைய பதவி விலகலானது பயனுறுதலும் வேண்டும்.

(4) சனாதிபதி, ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை காரணமெதுவும் காட்டாமல் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரின் பதவிக்காலம் (3) ஆம் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் இறக்கின்றவிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து சனாதிபதி (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்திற்கு வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(7) ஆறும் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) காலக்கழிவின்மூலம் பதவியை வறிதாக்கும் உறுப்பினரொருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(9) (அ) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் நான்கு ஆதல் வேண்டும்.

(ஆ) தவிசாளர், ஆணைக்குழுவின் ஒவ்வோர் கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் இல்லாவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(இ) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான தவிசாளர் அவரது சொந்த வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(ஈ) ஆணைக்குழுவானது ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும்.

(உ) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலுமான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(10) ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் நிர்மாணிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(11) ஆணைக்குழுவானது அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடமிருப்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன், ஆணைக்குழுவில் வெற்றிடமொன்று உளது என்ற அல்லது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுளது என்ற காரணத்தினால் மட்டும் ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றது எனக் கருதப்படுதலுமாகாது.

7. (1) சனாதிபதியானவர், ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கலாம். ஆணைக்குழுவின் தவிசாளர்.

(2) தவிசாளர், சனாதிபதிக்கு முகவரியிட்டெழுதப்பட்ட கடிதத்தின் மூலம் தவிசாளரின் பதவியை விட்டு விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது அது சனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) சனாதிபதியானவர் தவிசாளரைக் காரணம் எதுவும் காட்டாமல் தவிசாளர் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) தவிசாளரின் பதவிக்காலம், (2)ஆம் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய ஆணைக்குழுவில் அவரது உறுப்பாண்மைக் காலப் பகுதியாதல் வேண்டும்.

(5) சனாதிபதியானவர், தவிசாளருக்குத் துணைபுரிவதற்கென ஆணைக்குழுவின் வேறோர் உறுப்பினரை ஆணைக்குழுவின் நிறைவேற்று உறுப்பினரொருவராக நியமிக்கலாம்.

(6) ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்கள், பணிகள், கடமைகள் எதனையும் தவிசாளருக்கு அல்லது (5)ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிறைவேற்று உறுப்பினருக்குக் கையளிக்கலாம்.

ஆணைக்குழுவின் தத்துவங்கள்.

8. ஆணைக்குழுவானது பின்வரும் தத்துவங்களையுடையதாதல் வேண்டும் :—

(அ) ஆணைக்குழுவின் பணிகளை தகுந்தமுறையில் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான, விதித்துரைக்கப்பட்ட தகைமைகள் கொண்ட ஆட்கள் அடங்கிய அத்தகைய கற்கைக் கூட்டங்களை அல்லது குழுக்களை நியமனம் செய்தல்; அத்துடன் அத்தகைய கூட்டங்களின் அல்லது குழுக்களின் குறிக்கோள்களை வரையறை செய்தல்;

(ஆ) தனியாட்களிடமிருந்தும் ஆட்கள் குழுவிடமிருந்தும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் செயற்பாடு தொடர்பான தகவலைச் சேகரித்தலும் பெற்றுக்கொள்ளுதலும்; அத்தகைய தகவலை பகுப்பாய்வு செய்தலும், வருங்கால அபிவிருத்திக்குரிய முந்துரிமைத் துறைகளை விதித்துரைத்தலும் :

ஆயினும் எவ்வாறாயினும், அத்தகைய தனியாளிடமிருந்து அல்லது ஆட்கள் குழுவிடமிருந்து பெறப்பட்டதான, அத்தகைய தனியாளுக்கும் அல்லது ஆட்கள் குழுவுக்கும் அத்தகைய தகவல் எந்த ஆளைத் தொடர்புறுத்துகின்றதோ அந்த ஆளுக்குமிடையிலான ஏதேனும் உடன்படிக்கையால் அந்தரங்கமானதெனக் கருதுமாறு அத்தகைய தனியாள் அல்லது ஆட்கள் குழு தேவைப்படுத்தப்பட்டிருக்கின்றதான தகவல் எதுவும் ஆணைக் குழுவால் வெளியிடப்படுதல் ஆகாது;

(இ) விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் கருத்திட்டங்களினதும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் தேர்ச்சியைக் கண்காணித்தல்,

(ஈ) அமைச்சரின் ஒருப்பாட்டுடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பற்றிய இலங்கை மாநாட்டுக்கான விதிகளைத் தயாரித்தல்;

(உ) அமைச்சரின் அங்கீகாரத்துடன், முழுமையாக அல்லது பகுதியளவில் ஆணைக்குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வெளிநாட்டு நிறுவனங்களுடனான ஒத்துழைப்பிற்கும், தொழில்நுட்ப ஆளணியினரின் பரிமாற்றத்திற்கும் பொதுவில், அத்தகைய பொதுக் குறிக்கோள்களை எய்துவதற்கு உசிதமாகக் கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்குமான ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல்;

(ஊ) ஆண்டொன்றின்போது ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட வேலை பற்றிய அறிக்கையொன்றை அடுத்துவரும் ஆண்டின் மார்ச் மாதம் முப்பத்தோராம் திகதிக்குமுன்னர் அமைச்சருக்குச் சமர்ப்பித்தல், அமைச்சரானவர் அத்தகைய அறிக்கையைப் பாராளுமன்றத்துக்குமுன் கொணருவித்தல் வேண்டும்.

(எ) செயலாளர் ஒருவரையும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.

## பாகம் II

### தேசிய விஞ்ஞான தாபனம் (தே. வி. தா)

9. (இச்சட்டத்தில் இப்பாகத்தில் "தாபனம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) தேசிய விஞ்ஞான தாபனம் என அழைக்கப்படவேண்டிய தாபனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். தாபனமானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும் என்பதுடன் அதற்கு இடையறு வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் இருத்தலும் வேண்டும் என்பதுடன், அது அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். தேசிய விஞ்ஞான தாபனத்தைத் தாபித்தல்.

10. தாபனத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:— தாபனத்தின் பணிகள்.

(அ) (i) சமூக விஞ்ஞானங்களிலும் விஞ்ஞானக் கல்வித்திட்டங்களிலும் ஆராய்ச்சி செய்வது உட்பட விஞ்ஞான ஆராய்ச்சித் திறனைப் பலப்படுத்துகின்ற;

(ii) இலங்கையின் இயற்கை மூல வளங்களை அபிவிருத்தி செய்கின்ற;

(iii) இலங்கை மக்களின் நலனை மேம்படுத்துகின்ற; அத்துடன்

(iv) விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் ஆராய்ச்சி செய்யும் ஆளணியினரைப் பயிற்றுவிக்கின்ற,

நோக்கத்துடன் பல்கலைக்கழகங்களினாலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களினாலும் அத்துடன் விஞ்ஞானிகளினாலும் அடிப்படை மற்றும் பிரயோக விஞ்ஞான ஆராய்ச்சி செய்யப்படுவதை ஆரம்பித்து வைத்தல், அதற்கு வசதியளித்தல் அத்துடன் ஆதரவு அளித்தல் ;

(ஆ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள விஞ்ஞானிகளுக்கிடையில் விஞ்ஞானத் தகவல் பரிமாற்ற வளர்ச்சியை மேம்படுத்தல்;

(இ) விஞ்ஞான தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் விஞ்ஞானக் கற்கை நெறிக்காக அல்லது விஞ்ஞான ஆய்வுக்காகப் புலமைப் பரிசில்களும் இணையுரிமைப் பரிசில்களும் வழங்குதல்;

(ஈ) விஞ்ஞான தொழில்நுட்ப ஆளணியினரைப்பற்றிய நடப்பு இடாப்பொன்றைப் பேணுதலும் வேறு வழிகளில் இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மூலவளங்கள் கிடைக்கக்கூடிய தன்மை அத்துடன் அவற்றின் நடப்பு மற்றும் திட்டமிடப்பட்ட தேவை மீதான தரவுகளை சேகரிப்பதற்கு, பொருள்கோடல் செய்வதற்கு அத்துடன் பகுப்பாய்வு செய்வதற்கு மத்திய தகவல் சேகரிப்பு விநியோகமுறை ஒன்றை வழங்குதல் அத்துடன் விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் அத்துடன் வேறு துறைகள் மீதும் கொள்கைமுறைப்படுத்தல் செய்வதற்கான தகவல் மூலத்தை வழங்குதல் ;

(உ) அந்நோக்கத்துக்கென நிதியுதவியளிப்பதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் விஞ்ஞானத்தைப் பிரபல்யப்படுத்தல்.

முகாமைச் சபை.

11. (1) தாபனத்தினது அலுவல்களின் நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு ஆகியன, (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய பதினொரு உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களைக்கொண்ட முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஒரு தவிசாளர் ;

(ஆ) தாபனத்தின் பணிப்பாளர் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதியொருவர்;

(ஈ) தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(உ) இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ஊ) இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(எ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதி ஒருவர் ; அத்துடன்

(ஏ) விஞ்ஞானம், கல்வி, ஆராய்ச்சி, முகாமைத்துவம் அல்லது நிருவாகம் ஆகிய துறைகளில் புகழ்பெற்ற வேறு நாலு ஆட்களுக்கு மேற்படாதோர்.

(3) தாபனத்தின் பணிப்பாளர் தவிர்ந்த சபையின் உறுப்பினர் ஒருவர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகுதலானது, அது அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(4) அமைச்சரானவர், (தாபனத்தின் பணிப்பாளர் தவிர்ந்த) சபையின் உறுப்பினர் ஒருவரை, அதற்கான காரணம் எதுவும் காட்டாமல் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) மூன்றும், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாக இருத்தல் வேண்டும்.

(6) சபையின் உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சரானவர், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரின் இடத்துக்கு வேறொரு உறுப்பினரை நியமிக்கலாம்.

(7) ஆறும் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் சபையின் உறுப்பினர் ஒருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்து வருகின்றாரோ, அவ்வுறுப்பினரின் முடிவுறாத பதவிக்காலத்தின் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) காலக்கழிவினால் பதவியை வறிதாக்கும் சபையின் உறுப்பினர் ஒருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(9) (அ) சபையின் எக்கூட்டத்துக்குமான கூட்ட நடப்பெண் ஐந்தாதல் வேண்டும்.

(ஆ) சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தவிசாளர் தலைமை வகித்தல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் இல்லாதவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்திருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(இ) சபையின் ஏதேனும் கூட்டத்தின் தவிசாளருக்கு, அவரது சொந்த வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

(ஈ) சபையானது, ஆகக் குறைந்தது மாதத்துக்கு ஒருமுறையாவது கூடுதல் வேண்டும்.

(உ) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கொண்டு நடாத்தப்படுவது தொடர்பிலும் ஆன நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(10) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(11) சபையானது, அதன் உறுப்பினர்களுள் வெற்றிடம் எதுவும் இருப்பது எப்படியிருப்பினும் செயற்படலாம் என்பதுடன், சபையின் எச்செயலும் அல்லது நடவடிக்கையும், சபையில் வெற்றிடமொன்று

இருப்பதால் மட்டும் அல்லது சபையின் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு எதுவும இருப்பதனுல் மட்டும் செல்லுபடியற்றது எனக் கருதப்படுதலும் ஆகாது.

தாபனத்தின் விசேட தத்துவங்கள்

12. தாபனத்தின்மீது 25 ஆம் பிரிவினுல் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களோடு சேர்த்து, தாபனத்துக்குப் பின்வரும் தத்துவங்களும் இருத்தல் வேண்டும் :—

(அ) தாபனத்தின் பணிகளோடு தொடர்புடைய ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அல்லது தொடர்ந்து நடாத்துவதற்கு ஆராய்ச்சி மானியங்கள் வழங்குதல் ;

(ஆ) இலங்கையில் விஞ்ஞானம், தொழில் நுட்பவியல் ஆகியவற்றின் ஆராய்ச்சி செய்வதற்கு நிதியுதவி அளித்தல் அத்துடன் இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியல் அபிவிருத்தி மீது அத்தகைய நிதியுதவி அளிப்பு ஏற்படுத்தும் தாக்கம் ஆகியன தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக இலங்கையிலும் வேறு நாடுகளிலும் உள்ள தனிநபர்களோடு, கழகங்களோடு அல்லது நிறுவனங்களோடு தொடர்பை ஏற்படுத்திப் பேணுதல் ;

(இ) தாபனத்தினுல் தயாரிக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கமைய இலங்கைக்கு வெளியே, கூட்டங்களிலும் குறுகியகால ஆராய்ச்சி வேலையிலும் இலங்கை விஞ்ஞானிகள் பங்குபற்றுவதை மேம்படுத்துதலும் அதற்கு உதவியளித்தலும் அத்துடன் வெளிநாட்டு விஞ்ஞானிகளும், தொழிநுட்பவியலாளர்களும், தாபனத்தினுல் தயாரிக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கமைய, முன்னுரிமைத் துறைகளில் குறுகிய கால இணையுரிமைப் பரிசில்கள் பெற்று இலங்கையில் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்தலும் ,

(ஈ) தேசிய மட்டத்தில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட சஞ்சிகைகள் வெளியீடு செய்யப்படுவதை மேம்படுத்தல் ;

(உ) தாபனத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறுன அத்தகைய செயற்குழுக்களைத் தாபித்தல்;

(ஊ) இலங்கைக்கு வெளியே வேலை செய்கின்ற பெயர்பெற்ற இலங்கை விஞ்ஞானிகளும் தொழில்நுட்பவியலாளர்களும் நாட்டுக்குத் திரும்புவதற்கு ஊக்கமளித்தலும் அதற்கான வசதி செய்தலும்.

## பாகம் III

### தகவல் தொழில்நுட்பத்துக்கான பேரவை (த. தொ. பே.)

தகவல் தொழில் நுட்பத்துக்கான பேரவையைத் தாபித்தல்.

13. (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தகவல் தொழில்நுட்பத்துக்கான பேரவை என (த தொ. பே.) அழைக்கப்படவேண்டிய பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். பேரவையானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும் என்பதுடன் இடையரு வழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அது அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

14. பேரவையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :— பேரவையின் பணிகள்.

(அ) அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்பக் கொள்கைக் கிணங்கத் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதலும் திட்டமிடலும் ;

(ஆ) (i) தகவல் தொழில்நுட்ப அறிவு அத்துடன் அதன் பயன்பாடு ஆகியவற்றை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான ;

(ii) ஏற்றுமதி சார் தகவல் தொழில்நுட்ப சேவைகளை இனங்காணுவதற்கும் அத்துடன் மேம்படுத்துவதற்குமான ;

(iii) சமூக பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் முக்கியத்துவம் வாய்ந்த தகவலைச் சேகரிப்பதற்கு, மதிப்பீடு செய்வதற்கு அத்துடன் பரப்புவதற்கு தகவல் தொழில்நுட்பவியல் பயன்படுத்தப்படுவதை மேம்படுத்துவதற்கான ;

(iv) கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகளுடனான கலந்தாலோசனையுடன் தகவல் தொழில்நுட்பவியலின் மேம்பாட்டுக்கு அவசியமான மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான ;

(v) தகவல் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ;

(vi) தகவல் தொழில்நுட்பவியல் கைத்தொழில் தேசிய நியமங்கள் மற்றும் பொது அடிப்படைத் தத்துவங்கள் ஆகியவற்றின் பிரயோகத்தை இனங்காணுவதற்கும் அத்துடன் அவற்றை மேம்படுத்துவதற்குமான,

திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும் உட்பட தகவல் தொழில்நுட்பவியல் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்படுவதை ஒருங்கிணைத்தல் அத்துடன் கண்காணித்தல் ; அத்துடன்

(இ) தகவல் தொழில்நுட்பவியல் மீது ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குதல்.

15. (1) பேரவையானது, அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டியவர்களான பதினைந்து உறுப்பினர்களுக்கு மேற்படாதோரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவோரையும் கொண்டிருத்தலும் வேண்டும் :— பேரவையின் அமைப்பு.

(அ) ஒரு தவிசாளர் ;

(ஆ) பேரவையின் பணிப்பாளர் ;

(இ) தொலைத்தொடர்புப் பணிப்பாளர் நாயகம் ;

(ஈ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ;

(ஊ) தொழில்நுட்ப மற்றும் தொழில் முறைக்கல்வி ஆணைக்குழுவின் தவிசாளர் ;

(எ) கணனி விற்பனையாளர்கள் கழகத் தலைவர் ;

(ஏ) இலங்கை கணனிச் சபைத் தலைவர் ;

(ஐ) கணனிப் பயிற்சியாளர்கள் கழகத் தலைவர் ;

(ஒ) லாஃப்ட்வேயர் கழகத் தலைவர் ;

(ஓ) இலத்திரனியல் மின் சாதனங்கள் தொடர்பிலான கணனி, அத்துடன் தகவல் தொடர்புகள் என்பவற்றின் உற்பத்தியாளர்களின் பிரதிநிதி ஒருவர்;

(ஔ) தொலைத்தொடர்பு உள்ளக அமைப்பு வழங்குவோர், அத்துடன் பெறுமதி சேர்க்கப்பட்ட தொலைத்தொடர்புச் சேவைகள் வழங்குவோர் ஆகியோரின் பிரதிநிதி ஒருவர் ; அத்துடன்,

(க) தகவல் தொழில்நுட்பவியலில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்கள், முகாமையாளர்கள், தொழிலதிபர்கள் என்போரிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்படும் ஏனைய மூவர்.

(2) (பேரவையின் பணிப்பாளர் தவிர்ந்த) பேரவையின் உறுப்பினரொருவர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம்மூலம் தமது பதவியை துறக்கலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகுகையானது எந்தத் தேதியன்று அது அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து பயனுறுவதாதலும் வேண்டும்.

(3) (பேரவையின் பணிப்பாளர் தவிர்ந்த) பேரவையின் உறுப்பினர் ஒருவரை, அமைச்சரானவர், அதற்கான காரணம் எதனையும் குறிப்பிடாமல் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) இரண்டாம் அத்துடன் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவை உறுப்பினரின் பதவிக்காலமானது மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(5) காலக்கழிவு காரணமாகப் பதவியை வறிதாக்கும் பேரவையின் உறுப்பினர் ஒருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(6) பேரவையின் உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து, பதவி துறக்குமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சரானவர், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு வேறொரு உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவரான பேரவை உறுப்பினர் ஒருவர், எந்த உறுப்பினரை அடுத்தமைந்தாரோ அந்த உறுப்பினரின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) (அ) பேரவையின் கூட்டம் எதற்குமான கூட்ட நடப்பெண் எழு ஆதல் வேண்டும்.

(ஆ) பேரவையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் பேரவையின் கூட்டம் எதற்கும் வருகை தராதபோது அத்தகைய கூட்டத்திற் சமூகமளித்திருக்கும் உறுப்பினர்களில் பெரும்பான்மையோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(இ) பேரவையின் கூட்டம் எதனதும் தவிசாளர் தமது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) பேரவையானது ஆகக்குறைந்தது மாதம் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

(உ) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக்கொண்டு நடாத்துதல் தொடர்பிலும் ஆன நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(9) பேரவையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவருன அத்தகைய விதங்களில் ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(10) பேரவையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை எவ்வாறிருப்பினும், செயலாற்றலாமென்பதுடன் பேரவையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பேரவையில் ஒரு வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக அல்லது பேரவை உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுள்ளமை காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

16. இருபத்தைந்தாம் பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களுடன் மேலதிகமாக, பேரவையானது, தேசிய தகவல் தொழினுட்பத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இயைபான தகவலை, தனியாட்கள், அத்துடன் ஆட்கள் குழுக்கள் என்போரிடமிருந்து வேண்டிப்பெறுவதற்கும், அத்தகைய தகவலை ஆராய்ந்து, எதிர்கால அபிவிருத்திக்கான முன்னுரிமைத்துறைகளை விதந்துரைப்பதற்கும், தத்துவங்களைக் கொண்டதாதல் வேண்டும். பேரவையின் சிறப்பான தத்துவங்கள்.

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய தனியாளுக்கும் அல்லது ஆட்கள் குழுவுக்கும், அத்தகவல் எந்த ஆள் தொடர்பானதோ அந்த ஆளுக்கும் இடையேயான ஏதேனும் உடன்படிக்கைமூலம் இரகசியமானதாகப் பேணப்படவேண்டுமெனத் தேவைப்பட்டதான எவரேனும் தனியாளிடமிருந்து அல்லது ஆட்கள் குழுவிடமிருந்து பெறப்பட்ட தகவல் எதுவும் பேரவையினால் வெளியிடப்படுதலாகாது.

## பாகம் IV

### கைத்தொழில்சார் தொழினுட்பவியல் நிறுவகம் (கை. தொ. நி.)

கைத்தொழிற் சார் தொழி நுட்பவியல் நிறுவகத்தைத் தாபித்தல்

17. (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "தொழினுட்பவியல் நிறுவகம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) கைத்தொழில்சார் தொழினுட்பவியல் நிறுவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். தொழினுட்பவியல் நிறுவகமானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டுமென்பதுடன், இடையறு வழியுரிமையும் பொது இலச்சினையையும் கொண்டதாதலும் வேண்டும் என்பதுடன், அது அத்தகைய பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலா மென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

தொழினுட்பவியல் நிறுவகத்தின் குறிக் கோள்களும் பணிகளும்.

18. தொழினுட்பவியல் நிறுவகமானது தேவையைப் பூர்த்திசெய்வதாக இருத்தல் வேண்டும். தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் குறிக்கோள் இலங்கையிலுள்ள தொழினுட்பவியல் தரத்தை துரிதமான கைத்தொழில் மயமாக்குதலுக்குத் தேவைப்படும் மட்டத்திற்கு உயர்த்துவதாகும் என்பதுடன், இக்குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதில் அதன் பணிகள் பின்வருவனவாக இருத்தலும் வேண்டும்:—

(அ) (i) உற்பத்தித்தரத்தையும், கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் தொழினுட்பப் பதனீடுகள் அத்துடன் முறைகளையும் மேம்படுத்துவதற்காகவும் அத்துடன் கைத்தொழிலில் பயன் படுத்தப்படுவதற்காகப் புதிய தொழினுட்பப்பதனீடுகள், முறைகளைக் கண்டுபிடிப்பதற்காகவும் ஒப்பந்தத்தில் பொறுப்பேற்றல், சோதனை செய்தல், நுண்ணறியதாக ஆராய்தல் அத்துடன் ஆய்வு செய்தல் ;

(ii) தொழினுட்பச் சேவைகளையும் ஆலோசனைகளையும் ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(iii) தொழினுட்பவியல் கைமாற்றங்களுடன், தொழினுட்பங்களை மேற்கொள்ளல் அத்துடன் புதிய தொழினுட்பங்களை அபிவிருத்தி செய்தல் என்பன தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுதல் மூலம் கைத்தொழிலுக்கு உதவியளித்தல் ;

(ஆ) கைத்தொழில்சார் தொழினுட்ப அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் கருத்துடன், ஆய்வுகளை நடாத்துதல் ;

(இ) கைத்தொழில் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் கருத்துடன், குறிப்பாக உறைகாலத் தொழினுட்பவியலில் பயனுள்ள தொழினுட்பத் தகவலைச் சேகரித்தல், செய்முறைப்படுத்தல், அத்துடன் பரப்புதல் ;

(ஈ) தொழினுட்பவியல் நிறுவக அனுபவத்துடன் தொடர்பான துறைகளில் ஆட்களைப் பயிற்றுவித்தலை மேற்கொள்ளுதல் ;

(உ) சூழல் மாசடைதலை அளவைசெய்தலையும் அத்துடன் கண்காணிப்பதனையும் பொறுப்பேற்றல் அல்லது அதனை அளவை செய்தலிலும் கண்காணிப்பதிலும், கூட்டுச் சேர்த்தல் அத்துடன் அத்தகைய மாசடைதலைத் தணிப்பதற்கான பரிகார நடவடிக்கைகளை விதந்துரைத்தல் ;

(ண) அரசாங்கத் திணைக்களங்களுடனும் அத்துடன் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தொழினுட்பக் கல்லூரிகள் என்பவற்றுடனும் ஏனைய குழுக்களுடனும், கைத்தொழில்சார் தொழினுட்பவியல் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஆராய்ச்சியில் ஒத்துழைத்தல்.

19. (1) தொழினுட்பவியல் நிறுவகத்தின் நிருவாகம், முகாமை அத்துடன் அதன் அலுவல்களின் கட்டுப்பாடு என்பன (இப்பாகத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். முகாமைச் சபை.

(2) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(i) தவிசாளர்;

(ii) தொழினுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளர்;

(iii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(iv) தொழினுட்பவியல் கைமாற்றம், தொழினுட்பவியல் அபிவிருத்தி ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிக்கும் நிறுவனமொன்றின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்;

(v) விஞ்ஞானிகள், தொழினுட்பவியலாளர்கள், கைத்தொழில் துறைசார் தொழில் அதிபர்கள் என்போரிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்களான ஐந்து பேருக்கு மேற்படாத வேறு உறுப்பினர்கள்.

(3) (தொழினுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளர் தவிர்ந்த) சபையின் உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் அவரது பதவியைத் துறக்கலாமென்பதுடன் அத்தகைய பதவி விலகுகையானது எந்தத் தேதியன்று அது அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து பயனுடையதாதலும்வேண்டும்.

(4) அமைச்சரானவர் (தொழினுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளர் தவிர்ந்த) உறுப்பினரொருவரை அதற்கான காரணமெதனையும் தெரித்தொதுக்காது பதவியினின்று அகற்றலாம்.

(5) மூன்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையின் உறுப்பினரொருவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(6) காலக்கழிவு காரணமாகப் பதவியை வறிதாக்கும் உறுப்பினரொருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(7) சபையின் உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து, பதவி துறக்குமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சரானவர், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரது இடத்தில் வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவரான சபையின் உறுப்பினர் ஒருவர், அவர் எந்த உறுப்பினரை அடுத்தமைந்தாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாது எஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(9) (அ) சபையின் கூட்டம் எதற்குமான கூட்ட நடப்பெண் ஐந்து ஆதல் வேண்டும்.

(ஆ) சபையின் கூட்டமோவ்வொன்றிற்கும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் கூட்டம் எதற்கும் தவிசாளர் வருகை தராதபோது, அத்தகைய கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(இ) சபையின் கூட்டம் எதனுலும் தவிசாளர், அவரது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) சபையானது ஆகக் குறைந்தது மாதம் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

(உ) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது, அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக்கொண்டு நடாத்துதல் தொடர்பிலும் ஆன நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(10) சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஊதியமளிக்கப்படலாம்.

(11) சபையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது காரணமாக மாத்திரம் அல்லது சபையின் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றமை காரணமாக மாத்திரம் வலிதற்றதாகக் கருதப்படுதலாகாது.

சிறப்பான சேவைகளுக்கான உடன்படிக்கைகள்.

20. (1) தொழினுட்பவியல் நிறுவகம், கண்டுபிடிப்பு, புத்தாக்கம் அல்லது ஏதேனும் புதனிடுகளின், உபகரணத்தின் அல்லது இயந்திரத்தின், முறையின் அபிவிருத்தி பற்றிய குறிப்பான குறிக்கோளுடன் ஏதேனும் சிறப்பான நன்முயற்சியைக் கொண்டு நடாத்துவதற்கு அல்லது தொழினுட்பவியல் நிறுவகத்தின் அலுவல்களுடன் தொடர்பான வேறேதேனும் துறை தொடர்பாக உடன்படிக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும், அத்தகைய விதிப்புரைகளுக்கும் அமைவாக, எவரேனும் ஆளுடன் ஏதேனும் உடன்படிக்கையைச் செய்து கொள்ளலாம்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் உடன்படிக்கையின் மீழான ஏதேனும் கண்டுபிடிப்பிலான, புத்தாக்கத்திலான அல்லது அபிவிருத்தியிலான உரிமை ஒன்று, அத்தகைய உடன்படிக்கையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, ஆனால், 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒன்றில் தொழினுட்பவியல் நிறுவகத்திற்கு அல்லது நுண்ணுய்வை வேண்டுகின்ற ஆளுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### நவீன தொழினுட்பங்களுக்கான ஆர்தர் சி. கிளாக்கு நிறுவகம்

### (ந. தொ. ஆ. சி. கி. நிறுவகம்)

**நவீன தொழினுட்பங்களுக்கான ஆர்தர் சி. கிளாக்கு நிறுவகத்தைத் தாபித்தல்.**

21. (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "கிளாக்கு நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நவீன தொழினுட்பங்களுக்கான ஆதர் சி. கிளாக்கு நிறுவகம் (ந. தொ. ஆ. சி. கி. நி.) என அழைக்கப்பட வேண்டிய நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். கிளாக்கு நிறுவகமானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையையும் கொண்டிருப்பதுடன், அது அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

**கிளாக்கு நிறுவகத்தின் பணிகள்.**

22. கிளாக்கு நிறுவகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) பின்வருவன மூலம் நவீன தொழினுட்பங்களை அறிமுகப்படுத்துதலை துரிதப்படுத்துதல் :—

(i) நவீன தொழினுட்பங்களை பிரயோகிப்பதில் ஆய்வையும் அபிவிருத்தியையும் தொடக்குதல், மேம்படுத்தல் அத்துடன் அபிவிருத்தி செய்தல் ;

(ii) நவீன தொழினுட்பங்களை பிரயோகிப்பதில் அரசாங்க மற்றும் தனியார்துறைப்பொறுப்பு முயற்சிகளுக்கு, ஆய்வு அத்துடன் அபிவிருத்திக்கான ஆதரவுக்கு ஏற்பாடு செய்தல் ;

(iii) அரசாங்கத்தினதும் தனியார்துறைப் பொறுப்பு முயற்சிகளினதும் தேவைகளைச் சமாளிப்பதற்காக நவீன தொழினுட்பங்களில் ஆளணியினரைப் பயிற்றுவித்தல் ; அத்துடன்

(ஆ) எதிர்காலக் கல்விகளை மேம்படுத்துதல்.

இச்சட்டத்தில் "நவீன தொழினுட்பம்" எனும் சொல்லமைப்பு புதிய பொருள்கள், செய்திப் போக்குவரத்து மற்றும் உறவுபட்ட அறிவியல் துறைகள், தகவல் தொழினுட்பத்துறை, இலத்திரனியல், நுண் இலத்திரனியல், ஒளிப்படவியல், இயந்திர மனிதவியல் மற்றும் வான்வெளி தொழினுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

இளாக்கு நிறுவகத்தின் ஆளுநர்கள் சபை.

23. (1) இளாக்கு நிறுவகத்தின் திருவாகம், கட்டுப்பாடு என்பன அமைச்சரால் நியமிக்கப்படவேண்டிய பதினொரு உறுப்பினர்களுக்கு மேற்படாதவர்களைக் கொண்டுள்ள (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளுநர்கள் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தவிசாளர் ஒருவர் ;

(ஆ) இளாக்கு நிறுவகத்தின் பணிப்பாளர் ;

(இ) மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ;

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஏதேனும் வேறு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஒருவர் ;

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ஊ) நிதி அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(எ) விஞ்ஞான மேம்பாட்டிற்கான இலங்கைக் கழகத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ஏ) நவீன தொழினுட்பத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள், தொழினுட்பவியலாளர்கள், தொழில் அதிபர்கள், என்பவர்களிடையிருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நான்கிற்கு மேற்படாத வேறு உறுப்பினர்கள்.

(3) (இளாக்கு நிறுவனத்தின் பணிப்பாளர் தவிர்ந்த) சபையின் உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதமூலம் தமது பதவியைத் துறக்கலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது அது அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பயனுடையதாதலும் வேண்டும்.

(4) அமைச்சரானவர், (இளாக்கு நிறுவனத்தின் பணிப்பாளர் தவிர்ந்த) சபையின் உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து அதற்கான காரணம் எதனையும் குறித்தொதுக்காமல் அகற்றலாம்.

(5) மூன்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலமானது மூன்றாண்டுகளாகவிருத்தல் வேண்டும்.

(6) காலக்கழிதலினால் பதவியை வறிதாக்குகின்ற சபையின் உறுப்பினர் ஒருவர் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(7) சபையின் உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சரானவர், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்தில் வேறொரு உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(9) (அ) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்தாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) தவிசாளர் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை வகித்தல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராதவிடத்து அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(இ) சபையின் ஏதேனும் கூட்டத்தின் தவிசாளர், தமது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) சபையானது ஆகக்குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

(உ) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவது தொடர்பிலுமான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(10) சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஊதியம் செலுத்தப்படல் வேண்டும்.

(11) சபையானது அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பது எப்படியிருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் சபையில் வெற்றிடம் ஒன்று உள்ளதென்ற காரணத்தினால் மாத்திரம் அல்லது சபையின் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுள்ளதென்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

## பாகம் VI

### பொது

பாகங்கள் VI அத்துடன் VII என்பவற்றின் ஏற்புடைமை.

24. இப்பாகத்தினதும் VII ஆம் பாகத்தினதும் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் பாகம் II இனால் தாபிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான நிதித்தாபனம், இச்சட்டத்தின் III ஆம் பாகத்தினால் தாபிக்கப்பட்ட தகவல் தொழிநுட்பத்திற்கான பேரவை, இச்சட்டத்தின் IV ஆம் பாகத்தினால் தாபிக்கப்பட்ட கைத்தொழில்சார் தொழினுட்ப நிறுவகம் இச்சட்டத்தின்

V ஆம் பாகத்தினால் தாபிக்கப்பட்ட நவீன தொழினுட்பங்களுக்கான ஆர்தர் சீ. கிளாக்கு நிறுவகம் என்பவற்றிற்கு ஏற்புடைத்தாதல் வேண்டும் என்பதுடன், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி பிரிவுகள் 24 முதல் 42 வரையில் (இரண்டும் உட்பட) உள்ள ஒவ்வொரு குறிப்பீடும் —

(அ) "கூட்டுத்தாபனம்" என்பதற்கானது விடயத்திற்கேற்றாற் போன்று தேசிய விஞ்ஞான நிதித்தாபனம், தகவல் தொழினுட்பத்திற்கான பேரவை, கைத்தொழில் தொழினுட்ப நிறுவகம் அல்லது நவீன தொழினுட்பங்களுக்கான ஆர்தர் சீ. கிளாக்கு நிறுவகம் என்பவற்றிற்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) "சபை" என்பதற்கானது விடயத்திற்கேற்றாற்போன்று தேசிய விஞ்ஞான நிதித்தாபனத்தின் முகாமைச்சபை, தகவல் தொழினுட்பத்திற்கான பேரவை, கைத்தொழில் தொழினுட்ப நிறுவகத்தின் முகாமைச்சபை அல்லது நவீன தொழினுட்பங்களுக்கான ஆர்தர் சீ. கிளாக்கு நிறுவகத்தின் ஆளுநர்கள் சபை என்பவற்றிற்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) "தவிசாளர்" என்பதற்கானது விடயத்திற்கேற்றாற்போன்று நிதித்தாபனத்தின் தவிசாளர் அல்லது தகவல் தொழினுட்பத்திற்கான பேரவையின் தவிசாளர் அல்லது கைத்தொழில் தொழினுட்ப நிறுவகத்தின் தவிசாளர் அல்லது நவீன தொழினுட்பங்களுக்கான ஆர்தர் சீ. கிளாக்கு நிறுவகத்தின் தவிசாளர் என்பதற்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) "பணிப்பாளர்" அல்லது "கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்" என்பதற்கானது விடயத்திற்கேற்றாற்போன்று தேசிய விஞ்ஞான நிதித்தாபனத்தின் பணிப்பாளர், தகவல் தொழினுட்பப் பேரவையின் பணிப்பாளர், கைத்தொழில் தொழினுட்ப நிறுவகத்தின் பணிப்பாளர் அல்லது நவீன தொழினுட்பங்களுக்கான ஆர்தர் சீ. கிளாக்கு நிறுவகத்தின் பணிப்பாளர் என்பதற்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

25. கூட்டுத்தாபனமானது இச்சட்டத்தின் மேற்போந்த ஏற்பாடுகளினால் அதன்மீது பொறுப்பாக்கப்பட்ட ஏதேனும் தத்துவங்களுக்கு மேலதிகமாக —

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் அதனை விற்க, குத்தகைக்குக் கொடுக்க, ஈடுவைக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்ப்பதற்கு ;

(ஆ) ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும்;

(இ) அதன் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் என்பவற்றில் ஈடுபடுவதற்கு ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப் படாததான அதன் அத்தகைய நிதியங்களை அது தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்புக்களில் முதலீடு செய்வதற்கு;

(உ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான ஆய்வுகூடங்கள், நூல்நிலையங்கள், வேலைக்களங்கள் அத்துடன் அலுவலகங்கள் உட்பட அத்தகைய கட்டடங்களை நிறுவுவதற்கு, உபகாரணமிடுவதற்கு அத்துடன் அவற்றைப் பேணுவதற்கு;

(ஊ) அதன் பணிகளுக்கு இயைபான விடயங்கள் மீதான அறிக்கை களையும் பருவ வெளியீடுகளையும் பத்திரிகைகளையும் சேகரிப்ப தற்கு, அச்சிடுவதற்கு அத்துடன் வெளியிடுவதற்கு;

(எ) அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய குழுக்களையும் ஆலோசகர்களையும் நியமிப்பதற்கு;

(ஏ) அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும், நிறைவேற்று வதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய உரிமைகளை, சிறப்புரிமைகளை, தத்துவங்களை, உரிமங்களை அத்துடன் அதிகா ரங்களைக் கொள்ளுவதற்கு;

(ஐ) அவர்களது பொதுவான குறிக்கோள்களை எய்துவதற்கு உசித மாகக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காகப் பொது வாகவும், தொழினுட்ப ஆளணியினரைப் பரிமாற்றம் செய்வதற் காக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முழுமையாக அல் லது பகுதியளவில் ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட இலங்கை யிலாயினுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி உள்ள தாபனங்களு டன் ஒத்துழைப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரத்துடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுவதற்கு;

(ஒ) அதன் ஏதேனும் தத்துவங்களை, கடமைகளை, பணிகளைத் தவி சாளருக்கு, பணிப்பாளருக்கு அல்லது பந்தி (எ)இன்கீழ் நிய மிக்கப்பட்ட குழுவொன்றுக்குக் கையளிப்பதற்கு;

(ஓ) அதன் ஒத்த பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிய மிப்பதற்கு;

(ஔ) பணிப்பாளர் தவிர்ந்த, அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மீதும் சேவையாளர்கள் மீதும் பதவிவிலக்கல் உட்பட ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு;

(க) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியங்களை நிர்ணயிப் பதற்கு;

(ங) நிறைவேற்றுதல் மீது ஊக்குவிப்பு என்ற அடிப்படையில் கூட் டுத்தாபனத்தின் விஞ்ஞானிகளுக்கு, பொறியியலாளருக்கு, தொழினுட்ப ஆளணியினருக்கு அத்துடன் ஏனைய ஊழியர் களுக்கு ஊக்குவிப்புகளை அளிப்பதற்கு,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

பணிப்புரைகள் வழங்குவதற்கான தத்துவம்.

26. அமைச்சரானவர், காலத்திற்குக்காலம், சபையுடனான கலந்தாலோசனையின்பின்னர், சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்குமான அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளைச் சபைக்கு வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் சபையின் கடமையாதலும் வேண்டும்.

பணிப்பாளர்.

27. (1) பணிப்பாளர், கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரானவர், சபையுடனான கலந்தாலோசனையுடனும் அத்துடன் (3) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகளையும் ஆட்சேர்ப்புச் செயற்றிட்டத்தையும் கருத்திற்கொண்டும் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான செயற்றிட்டத்தையும் தகைமைகளையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர், அவரது நியமனத் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஐந்தாண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) அமைச்சரானவர், முறையான விசாரணையின் பின் செய்யப்பட்ட சபையின் விதப்புரையின்மேல், பணிப்பாளரை :—

(அ) அவர் நிரந்தரமாக அவரது கடமைகளைப் புரிய இயலாதவராக வந்தால்; அல்லது

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கும் நலன்களுக்கும் வெளிப்படையாக எதிராகவுள்ள ஏதேனும் செயலை அவர் செய்திருந்தால்,

பதவியிலிருந்து அகற்றலாம்.

(6) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருக்கு, நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளரின் நியமனத்திற்கு அல்லது அதன் தொடர்பில் ஏற்புடைத்தாதலாகாது.

இரகசியம் பற்றிய வெளிப்படுத்துகை.

28. (1) சபையின் அல்லது அதன் குழுவொன்றின் உறுப்பினர் ஒவ்வொருவரும், கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒவ்வொருவரும், தமது கடமைகளைப் பொறுப்பேற்பதன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் வேலை தொடர்பான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பாக இரகசியத்தைப் பேணுவதாகத் தம்மைக் கட்டுப்படுத்துகின்ற வெளிப்படுத்துகை ஒன்றில் கையொப்பமிட வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகை மூலம் —

(அ) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுடன் இணங்கியொழுகுவதில்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரிவதில் அல்லது அவரது பணிகளை நிறைவேற்றுவதில்,

தவிர, அவரது கடமைகளைப் புரிவதால் அல்லது அவரது பணிகளை நிறைவேற்றுகையில் அவரது அறிவுக்கு வரக்கூடிய ஏதேனும் தகவலை வெளியிடாதிருப்பதற்கு தம்மைக் கட்டுப்படுத்துதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும் 1979ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் எவரேனும் ஆள் மீது அளிக்கப்பட்ட உரிமைகளை மீறி ஏதேனும் தகவலை வெளியிடுவதற்கு அல்லது ஏதேனும் செயலைச் செய்வதற்கு சபையின் உறுப்பினர் ஒருவரை அல்லது கூட்டுத்தாபனத்தின் அலுவலரை அதிகாரமளிப்பதாக வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

29. இருபத்தெட்டாம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றவரான சபையின் உறுப்பினரொருவராக அல்லது கூட்டுத்தாபனத்தின் அலுவலர், சேவையாளர் ஒருவராக இருக்கும் ஒவ்வொரு ஆளும், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விசாரணையின்பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட தன்மேல் இருபதாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும். *பிரிவு 28ஐ மீறுதலான தவறொன்றுதல்.*

30. சபையினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட உத்தேசிக்கப்படும் உடன்படிக்கையில் அல்லது ஒப்பந்தத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கறையுள்ள சபையின் உறுப்பினர் ஒருவர் இயைபான சூழ்நிலைகள் அவரது அறிவுக்கு எட்டியவுடன் இயலக்கூடியளவு விரைவாக அத்தகைய அக்கறையின் தன்மையையும் அளவையும் சபைக்கு வெளியிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் அவ்வெளியிடுகை தொடர்பிலான உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிவில் பங்குபற்றுதலும் ஆகாது. *சபையின் உறுப்பினர் ஒப்பந்தத்தில் தமக்குள்ள அக்கறையை வெளியிடுதல்.*

31. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது — *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

(அ) சபை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடன் தவிரவும் பணிப்பாளரின் அத்துடன் சபையின் உறுப்பினர் ஒருவரின் சமூகத்தில் தவிரவும் ஏதேனும் ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது, என்பதுடன் பணிப்பாளரும் சபை உறுப்பினரொருவரும் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அவ்வாவணத்தில் ஒப்பமிடுதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைக் கான பாது காப்பு.

32. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, சபைக்கு எதிராக வேனும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவர் எவரினாலும் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராகவேனும்,

தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் சபையினால் அல்லது சபைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கில் சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையினால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுத் தொகைகள் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்படுகின்றவரான எவரேனும் அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல்தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னராக அவருக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் தொடர்ச்சியில் குற்றவழக்கில், அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவானது, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொள்ளுமாயின், அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அத்தகைய செலவு அறவிடப்பட்டாலொழிய, கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களும் சேவையாளர் களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

33. கூட்டுத்தாபனத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்படக் கூட்டுத்தாபனமானது, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

34. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்படக் கூட்டுத்தாபனமானது அட்டவணைப்படுத்தப்பட்டவொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

35. (1) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும், அத்துடன் எந்த கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியெதுவும் பாராளுமன்றத்தினால் அது அங்கீகரிக்கப்பட்டு அத்துடன் அத்தகைய அங்கீகாரத்தின் அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்பட்டாலன்றி வலுவுக்கு வருதல் ஆகாது.

சபையின் உறுப்பினருக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

36. கூட்டுத்தாபனத்திற்கெதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில், சபையில் எவரேனும் உறுப்பினருக்கெதிராக, அல்லது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கெதிராக, ஆளுக்கு அல்லது ஆதனத்துக்கெதிரான எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

கூட்டுத்தாபனத்திற்கேற்பட்ட இழப்பிற்கான பொறுப்பு.

37. அவாது தவறான நடத்தையினால் அல்லது வேண்டுமென்றே செய்த செயலினால் ஏற்பட்டிருந்தாலன்றி, சபையின் உறுப்பினரெவரும் அல்லது கூட்டுத்தாபனத்தின் அலுவலரெவரும் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் சேதத்துக்கு அல்லது இழப்பிற்குப் பொறுப்பாளி ஆதல் ஆகாது.

## பாகம் VII

## நிதி

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

38. (1) கூட்டுத்தாபனமானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியத்துக்கு —

(அ) கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டிற்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்;

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு, அதனது தத்துவங்களை, பணிகளை, அத்துடன் கடமைகளைப் பிரயோகிப்பதனால், புரிவதனால், நிறைவேற்றுவதனால் கிடைக்கக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ;

(இ) எத்தகையதுமான எம்மூலங்களிலிருந்தேனும் கடன்கள், நன் கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாக கூட்டுத்தாபனத்தினால் பெறப்படக்கூடியவாறான பணத்தொகைகள் யாவும்;

(ஈ) இச்சட்டத்தின் ஏதேனும் வேறு ஏற்பாட்டினால் நிதியத்திற்குச் செலுத்தப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்டவாறான பணத்தொகைகள் யாவும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனம் அதனது தத்துவங்களை, பணிகளை, அத்துடன் கடமைகளை, பிரயோகிக்கையில், புரிகையில், அத்துடன் நிறைவேற்றுகையில் அதனால் உறப்பட்ட செலவுகளை ஈடுசெய்வதற்குத் தேவைப்படுகின்ற அத்தகைய பணத்தொகைகள் யாவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நிதிகளிலிருந்து கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப் படவேண்டுமென இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும், நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கடன் எடுத்தல்.

39. கூட்டுத்தாபனமானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் அதனது கடப்பாடுகளை நிறைவு செய்வதற்கு அல்லது கடமைகளைப் புரிவதற்கு அல்லது பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை மேலதிகப் பற்றின் மூலம் அல்லது வேறுவகையாகத் தற்காலிகமாகக் கடன் வாங்கலாம்: ஆயின், இப் பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட ஏதேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பாக நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தத் தொகைகள் எந்நேரத்திலும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான, அத்தகைய தொகையை விஞ்சுதலாகாது.

கணக்குகளின் கணக்காய்வு.

40. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வரவு செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள், மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன தொடர்பில் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

சில வரிகளுக்கு விலக்களிப்பு.

41. கூட்டுத்தாபனமானது —

(அ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரானவர், அத்தகைய விலக்களிப்பிற்கு அங்கீகாரம் வழங்கினால், கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது பிணையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் பொருட்கள் மீதான ஏதேனும் சுங்கத்தீர்வையின் அல்லது உற்பத்தித் தீர்வையின் ;

(ஆ) கூட்டுத்தாபனத்திற்காக அல்லது அதன் சார்பில், அல்லது அதனால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனத்தின் மீது ஏதேனும் முத்திரை வரியின்,

கொடுப்பனவில் இருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்திற்கான நன்கொடைகள்.

42. கூட்டுத்தாபனத்திற்குப் பணமாகவோ அல்லது வேறு வகையிலோ செய்யப்பட்ட ஒவ்வொரு நன்கொடையும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட ஒரு நிதியத்துக்குப் பணமாகவோ அல்லது வேறுவகையாகவோ செய்யப்பட்ட ஒரு நன்கொடையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VIII

### நீக்கங்களும் நிலைபெயர்கால ஏற்பாடுகளும்.

நீக்கங்கள்.

43. (1) 1981 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, இலங்கை இயற்கை மூல வளங்கள் சக்தி, விஞ்ஞான அதிகார சபைச் சட்டம், 1984 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை கணனி, தகவல் தொழில்நுட்ப சபைச் சட்டம், இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகச் சட்டம் அத்துடன் 1984 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி. கிளாக்கு மத்திய நிலையச் சட்டம் என்பன இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

(2) மேற்கூறப்பட்ட சட்டங்களின் நீக்கம் எது, எப்படியிருப்பினும்—

(அ) நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று பதவிவகித்த இயைபான ஒரு கூட்டுத்தாபனத்தின் எல்லா அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று அவர்களினால் வகிக்கப்பட்ட உரிய பதவிகளுடன் இணைந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் குறையாத அனுகூலமுடைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும்மீது, நேரொத்த கூட்டுத்தாபனத்தில் ஊழியம் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று, இயைபான ஒரு கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உரித்தாக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட அசையும் அல்லது அசையா ஆதனங்கள் யாவும் நியமித்த தேதியிலிருந்து நேரொத்த கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(இ) நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று உளதாயிருக்கின்றதும் இயைபான ஒரு கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும், நியமித்த தேதியிலிருந்து, நேரொத்த கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளுமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வலுவுக்கிடவும்படலாம் ;

(ஈ) நியமித்த தேதிக்கு முந்தியநாளன்று உளதாயிருக்கின்ற இயைபான ஒரு கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பொறுப்புக்களும், நியமித்த தேதியிலிருந்து நேரொத்த கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களாக கருதப்படுதல் வேண்டும்.

(உ) நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று முடிவுறாதிருப்பனவான இயைபான ஒரு கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராக, தொடரப்பட்ட எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும், நியமித்த தேதியிலிருந்து, நேரொத்த கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட வழக்குகளாக அல்லது வழக்கு நடவடிக்கைகளாக, கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க கொண்டுநடத்தவும்படலாம்.

(ஊ) நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று தீர்க்கப்படாதிருப்பதான, இயைபான ஒரு கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாய சபையினால் பதியப்பட்ட அல்லது செய்யப்பட்ட பணக்கொடுப்பனவு தொடர்பிலான ஏதேனும் தீர்வை அல்லது நடுநிலைத்தீர்ப்பு நியமித்த தேதியிலிருந்து, நேரொத்த கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட அல்லது செய்யப்பட்ட தீர்வை அல்லது நடுநிலைத்தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடவும் படலாம் ;

(எ) ஓர் இயைபான கூட்டுத்தாபனத்தைத் தாபிக்கும் ஒரு சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று வலுவிலுள்ள எல்லா விதிகளும் ஒழுங்குவிதிகளும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவையாக இல்லாத அளவுக்கு இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளெனக் கருதப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில்,

"இயைபான கூட்டுத்தாபனம்" என்பது 1981 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, இலங்கை இயற்கை மூலவளங்கள் சக்தி அத்துடன் விஞ்ஞான அதிகார சபை சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை இயற்கை மூல வளங்கள் சக்தியும் விஞ்ஞான அதிகார சபையெனவும், 1984 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, இலங்கை கணனி தொழினுட்பவியல் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை கணனி தகவல் தொழினுட்பவியல் சபையெனவும், இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகச் சட்டத்

இனுல் தாபிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகமெனவும், 1984 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நவீன தொழினுட்ப வியலுக்கான ஆர்தர் சி. கிளாக்கு மத்திய நிலையச் சட்டத்தினுல் தாபிக் கப்பட்ட நவீன தொழினுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளாக்கு மத்திய நிலையம் எனவும் பொருள்படும்.

தேரொத்த கூட்டுத்தாபனம் என்பது—

(அ) இலங்கை இயற்கை மூலவளங்கள் சக்தி விஞ்ஞான அதிகாரசபை தொடர்பில் பயன்படுத்தும்போது, இச்சட்டத்தின் பாகம் II இனுல் தாபிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான நிதித்தாபனம் எனப் பொருள்படும்.

(ஆ) இலங்கை கணனி தகவல் தொழினுட்பவியல் சபை தொடர் பில் பயன்படுத்தும்போது, இச்சட்டத்தின் III ஆம் பாகத்தினுல் தாபிக்கப்பட்ட தகவல் தொழினுட்பவியலுக்கான பேரவை யெனப் பொருள்படும்.

(இ) இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகம் தொடர் பில் பயன்படுத்தும்போது இச்சட்டத்தின் IV ஆம் பாகத்தினுல் தாபிக்கப்பட்ட கைத்தொழில்சார் தொழினுட்பவியல் நிறுவகம் எனப் பொருள்படும் ;

(ஈ) நவீன தொழினுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளாக்கு மத்திய நிலையம் தொடர்பில் பயன்படுத்தும்போது, இச்சட்டத்தின் V ஆம் பாகத்தினுல் தாபிக்கப்பட்ட நவீன தொழினுட்பவிய லுக்கான ஆர்தர் சி. கிளாக்கு நிறுவகம் எனப் பொருள்படும்.

44. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

## பாகம் IX

### பொருள்கோடல்.

45. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினு லன்றி — பொருள்கோடல்.

"தகவல் தொழில் நுட்பவியல்" என்பது தரவையும் தகவலையும் சேக ரித்தல், செலுத்துதல், பதனிடுதலுக்கான ஏதேனும் தொழில் நுட்பவியல் எனப் பொருள்படும் ;

"பொறியியலாளர்கள் நிறுவகம்" என்பது 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம் எனப் பொருள்படும் ;

"கடன் வழங்கும் நிறுவகம்" என்பது 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியக சட்டத்திலுள்ள அதே கருத்தைக் கொண்டிருக்கும் ;

"தேசிய கல்வி நிறுவகம்" என்பது 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் எனப் பொருள்படும்;

"மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் பாகம் XVIஅவினால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை எனப் பொருள்படும்;

"மூன்றாம் நிலைத்தொழிற்கல்வி ஆணைக்குழு" என்பது 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைத்தொழிற் கல்வி ஆணைக்குழுவைக் குறிக்கும்;

"பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 244, [illegible] மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.